செ.கு. எண்: 201

நாள்: 20.11.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 20.11.2011

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், தெற்கு குருவிகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கனியப்பன் என்பவரின் மகன் திரு. துரை, மலையாங்குளம் கிராமத்தில் 18.11.2011 அன்று மாடு மேய்த்து விட்டு திரும்பி வரும் வழியில் இடி, மின்னல் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. துரை குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், அவரது குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9